ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

त्वमेको लोकानां परमफलदो दिव्यपदवीं
वहन्तस्त्वन्मूलां पुनरपि भजन्ते हरिमुखाः ।
कियद्वा दाक्षिण्यं तव शिव मदाशा च कियती
कदा वा मद्रक्षां वहसि करुणापूरितदृशा ॥

शिवानन्दलहरी ।

ஹே. சிவ. ஈச்வர நீர் ஒருவர் லோகங்களுக்கு மிகவும் சிறந்ததான மோக்ஷமென்கிற பலத்தைக் கொடுக்கிறவர். இந்திரன் முதலான சகல தேவதைகளும் உம்முடைய அனுக்கிரகத்தால் சிறந்த போகத்தைப் பெற்றும் திருப்தியடையாமல் மேலான பதவியையடைய வேண்டி மறுபடியும் உம்மை ஆராதிக்கிறார்கள். ஹே சந்திரமௌளே! பக்தர்களைப் பாதுகார்க்க வேண்டிய விஷயத்தில் உமக்கிருக்கும் தாக்ஷிண்யத்தை கணக்கிட முடியாது என்னுடைய ஆசை அற்பமானது கருணை வெள்ளத்தால் நிறைந்த உமது திருஷ்டியால் எப்பொழுது என்னைப் பார்த்து ரக்ஷிக்கப் போகின்றீர் என்று ஓர் பக்தர் வேண்டுகிறார்.

பல தேவதைகளிருப்பினும் சிவபெருமானிடம் விசேஷ பக்தி கொண்ட ஓர் மஹான் அவரையே மேலான தெய்வமாகக் கருதி ஸகல ஜனங்களுக்கும் அவரவர்களின் இஷ்டத்தை இவரே யளிக்க வல்லவரென்றும், எல்லா தேவதைகளும் இவருடைய அனுக்கிரத்தால் விசேஷமான சிறந்தபதவியை யடைந்திருக்கிறார்களென்றும் நிரூபித்து அற்பமான தன்னிடத்தையும் பூர்த்தி செய்து அனுக்கிரகிக்கவேண்டு மென்று இவ்விதம் பிரார்த்திக்கின்றார் இதினால் यो यो यां यां तनुं भक्तः என்று கீதாசாஸ்திரத்தில் பகவான் கூறியவாறு எதாவதோர் தேவதா மூர்த்தியிடம் திருடமான பக்தியைச் செய்து அதின் அனுக்கிரகத்தைப் பெற வேண்டியது முக்கியம் என்று அறிவிக்கிறார்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
ரக்தாக்ஷி-ௗ பங்குனி-ீ உ०-உ

வேதாந்தஸாரம்.

(148-வது பக்கத்துடர்ச்சி)

விஷய நிருபணம்.

विषयो जीवब्रह्मैक्यं-शुद्धं चैतन्यं प्रमेयं तत्रैव वेदान्तानां तात्पर्यात् ।

இந்த சாஸ்திரத்திற்கு விஷயம் "ஜீவன், பிர்மம் இவ்விரண்டும் ஒன்றே. வேறல்ல" என்பதேயாகும் சகல வேதாந்த வாக்கியங்களும் சுத்த சைதன்யரூபமான பிர்மஸ்வரூபத்தை நிரூபிப்பதால் அதுவே விஷயமாகும்.

ஸம்பந்த நிருபணம்.

बोध्यबोधकभावस्सम्बन्धः ॥

"சுத்த பிர்மஸ்வரூபமானது உபநிடதங்களால் அறிவிக்கப்படுகின்றது, உபநிடதங்கள் பிர்மத்தை அறிவிக்கின்றன" என்கிற இதுவே ஸம்பந்தமாகும்

பிரயோஜன நிருபணம்.

प्रयोजनं तु तदैक्यप्रमेयगता ज्ञाननिवृत्तिः स्वस्वरूपानन्दावाप्तिश्च ।

அக்ஞான ஸம்பந்தத்தால் உண்மையான தனது ஸ்வரூபத்தை மறந்து கஷ்டப்படும் ஜீவன் சிறந்த ஞானத்தைப் பெற்று அதனுல் சகல துக்கங்களேயும் அறவே யொழித்து ஆத்மானந்தத்தைப் பெறுவதே வேதாந்த சாஸ்திர ஞானத்தாலேற்படும் பயன்.

वेदान्तार्थविचारेण जायते ज्ञानमुत्तमम् ।
तेनात्यन्तिकसंसारदुःखनाशो भवत्यलम् ॥

வேதாந்த சாஸ்திரார்த்தத்தை விசாரிப்பதால் மிகவும் சிறந்த ஞானம் உண்டாகின்றது. "ஞானோதயத்தால் கதிரொளியைக் கண்ட இருள்போல் அக்ஞானம் நாசத்தையடைந்து ஸம்ஸார துக்கமும் அடியோடு அற்றுப்போகின்றது" என்றும், "வேதாந்த சாஸ்திர விசாரத்துக்குப் பயனாகச் சிறந்த ஞானமும், ஸம்ஸார துக்க நிவிருத்திமேற்படுகின்றன" என்று ஸ்ரீ பகவத்பாதாள் கூறியிருக்கிறார்கள். "ஆத்மஸ்வரூபத்தை யறிந்தவன் சகல துக்கங்களையும் தாண்டிவிடுகிறான். பிர்மஸ்வரூபத்தை யறிந்தவன் பிர்மமாகவேயாகிறான்" என்கிற இவைபோன்ற பலசுருதி வசனங்களும் இவ்விஷயத்தில் பிரமாணங்களாகும். இதுவரை சாஸ்திராரம்பத்தில் அவசியம் அறிந்துகொள்ளவேண்டிய நான்கு சம்பந்தங்களும் முறையே நிரூபிக்கப்பட்டன. இங்கே சாஸ்திரத்தினுடைய துவக்கத்தில் இந்த ஸம்பந்தங்கள் எதற்காக நிரூபிக்கப்படவேண்டும் என்று சிலர் சங்கிக்கலாம். அச்சங்கை சரியல்ல சாஸ்திரங்கள் யாவும் மனிதர்களின் உபயோகத்திற்காகவே வெளியிடப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் எல்லா ஜனங்களுக்கும் எல்லா சாஸ்திரங்களிலும் கற்கவேண்டும் என்கிற ஆவல் ஏற்படுவது சிரமம், அப்படி ஏற்பட்டாலும் விஷயம் இன்னதென்று தெரிந்தால்மட்டும் எந்த விஷயத்தைத் தனக்கு அறிந்துகொள்ளவேண்டுமென்று விருப்பமுண்டாகிறதோ அவ்விஷயத்தைப் போதிக்கும் சாஸ்திரத்தைப் படிக்க முன்வருவான் சப்தக் ஞானத்தைப் பெறவேண்டுமென்று முயற்சிப்பவனுக்கு அதை யறிவிக்கும் வியாகரண சாஸ்திரத்தைப் படிக்க இச்சையுண்டாகுமேயன்றி, வேறு சாஸ்திரத்தில் விருப்பமுண்டாக மாட்டாது. அவனுக்கு வியாகரண மென்று பொதுவாய்ச் சொன்னால் போதாது அதிலுள்ள விஷயம் இன்னதென்று முந்தி அறிவித்தால் தான் இதைத்தான் நாம் படித்தறிய வேண்டுமென்று சந்தோஷமாய் அதைப்படிக்க முன்வருவான். இவ்விதமே ஒவ்வொரு சாஸ்திரங்களிலுமுள்ள விஷயங்களை முந்தி வெளியிட்டால் மட்டும் அவரவர்களினிஷ்டானு சாரமாய் அதைப்படிக்க வேண்டு

மென்கிற ஆவலுடன் எத்தனிப்பார்கள். இல்லாவிட்டால் தங் தளுக்கிஷ்டமான விஷயத்தை இது கூறுகின்றதோ இல்லையோ வெனச் சங்கையுண்டாகிச் சாஸ்திரத்தில் பிரவிருத்தியேற்படாது ஆகையால் விஷய நிரூபணம் அவசியம் வேண்டியதே.

प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते ।

"என்கிற சான்றோர் சாற்றுக்கிணங்க எவ்வளவு சிறந்த காரியமாயிருப்பினும், இதைச் செய்வதால் யாதுபயன், எதற்காகச் செய்யவேண்டும்" என்று எதற்கும் முந்திப்பயனை எதிர் பார்ப்பதென்பது நம்முடைய ஜனங்களுக்கு இயற்கையாயிருப்பதால் பயனை முந்தி அறிவிக்காவிட்டால் பலமேற்படு மென்கிற பொறுமையுடன் சாஸ்திரங்களைப்படிக்க முன்வரமாட்டார்களாகையால் அதையறிவிக்க வேண்டியதும் முக்கியமே.

சாஸ்திரங்களுக்கிருக்கும் மகிமையும், அவைகளின் பலத்திற்குக் கூறப்படும் பெருமையையும் கேட்டு நாம் இதற்கு அதிகாரியா; இல்லையா என்கிற விசாரமே செய்யாமல் அனதிகாரிகளாயிருப்பவர்கள்கூடப் பலத்தைப் பெறவேண்டு மென்கிற அவாவின் மேலீட்டால் சாஸ்திரத்தைக் கற்க முயலுவார்கள். எவ்வளவு முயற்சி செய்தாலும் அனதிகாரிக்கு எப்படியுபயோகப்படும்? அவ்விதம் உபயோகப்படாமல் போகவே தனக்கிருக்குமக்ஞானத்தைச் சற்றுமறியாமல் சாஸ்திரங்களிற் குறைகூற முன்வருவான். ஆகையால் அதிகாரி நிரூபணமும் ஆவச்யகம்தான்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வர்ணாச்ரமம்.

(ஜாதிப்பிரிவினை)

(160-வது பக்கத்தொடர்ச்சி)

அவைகளில் சில முக்கிய கேள்விகளும் பதில்களும் பின் வருமாறு:—

கேள்வி:—தீண்டாமை என்றும் தடை அடியோடுநீக்கப் பட்டால் தீண்டத்தகாதவரெனப் படுவோருடைய மத அந் தஸ்து எத்தன்மையதாக இருக்கும்?

பதில்:—ஜாதி ஹிந்துக்களுக்கு மத விஷயத்தில் எத்த கைய அந்தஸ்து இருக்கின்றதோ அத்தகைய அந்தஸ்தே இவர்களுக்கு மிருக்கும், ஆதலால் அவர்களை ஆதி சூத்திரர்கள் என்று கூறுவதற்குப் பதிலாக சூத்திரர்கள் என்று கூறவேண் டியிருக்கும்.

கேள்வி:—தீண்டாமையானது நீக்கப்பட்ட பின்பு தீண் டத்தகாதவரெனக் கருதப்பட்டு வந்தவருக்கும் உயர்ந்த ஜாதி யினராயும், வைதீகராயும் உள்ள பிராமணருக்கும் என்ன சம்பந்தமிருக்கும்?

பதில்:—பிராமணரல்லாத ஹிந்துக்களுக்கும் அவர்களுக் கும் தற்பொழுது இருந்துவரும் சம்பந்தமே அவர்களிடை இருந்து வரும்.

கேள்வி:—ஜாதிகள் ஒன்ருேடு ஒன்று கலந்துபோவதைத் தாங்கள் ஆதரிக்கின்றீர்களா?

பதில்:—நான் எல்லாவகுப்பு வித்தியாயங்களையும் போக் கிவிட்டு நான்கே நான்கு பாகுபாடுகளை மாத்திரம் வைத்துக் கொள்வேன்.

கேள்வி:—வர்ணுசிரம தர்மத்தின் திறமையில் தங்களு க்கு நம்பிக்கையுண்டா?

பதில்.—ஆம். எனக்கு அதில் நம்பிக்கையுண்டு. ஆனல் தற்சமயம் வருணங்கள் குலைந்திருக்கின்றன. ஆச்சிரமங்களின் சின்னத்தையே காணும். தர்மமானது அதன் சுயரூபத்தில் தெறிவிக்கப்படாமல் தவமுக எடுத்துரைக்கப் படுகின்றது. நமது சமூகஅமைப்பையே அடியோடு திருத்தியமைக்கவேண் டியிருக்கின்றது. இவ்வாறு செய்யும் பொழுது அதனை மதத் துறையில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்களுக்கி ணங்க அமைக்கவேண்டும்.

இவைகளிலிருந்து மூன்ருவது வகுப்பில்தான் இவரைச் சேர்க்கவேண்டு மென்பது வெளிப்படையா யிருந்தபோதிலும் கடைசி வாக்கியங்களிலிருந்து சில சம்சயங்கள் உதிக்கின்றன. எது எப்படி யிருந்தபோதிலும் ஜாதிப்பிரிவினை "தேசமுன்னேற் றத்துக்கு இடைஞ்சல்" என்பதில் எல்லோரும் ஒரே மொழியா யிருக்கிருர்கள். ஆகையால் முதலில் இவ்வபவாதம் சரியா வென் பதைப் பரிசிலனை செய்துவிட்டுப் பிறகு சாஸ்திரங்கள் ஒருதலைப் பக்ஷமாய் எழுதப்பட்டனவா, பிறப்பினுல் ஜாதிகளில்லையா வென்பதைக் கவனிப்போம்.

உலகில் எக்காரியமும் ஒழுங்காய் நடைபெற வேண்டின் கட்டுப்பாடும் நிபந்தனையும் வேண்டும். அவையில்லாவிடில் அர சாங்கத்தை நடத்தமுடியாது. ஆங்கிலேயர்கள் பெருத்த வியா பாரங்கள் செய்வதிலும் ராஜ்யமாளுவதிலும் பல டிபார்ட்மெண்டு களை எற்படுத்தித் திறமையாய் நடத்துவதாகச் சொல்லப்படு கிறது. மனிதர் எல்லோரும் சரிதானே என்று ரயில்வண்டி ஓட் டத் தெரிந்தவனை கலெக்டர் வேலையிலாவது, நிர்வாகத்திறமை வாய்ந்தவனை கப்பலோட்டவாவது நியமிக்கிருர்களா? வியாபா ரம் அல்லது சாமான் உற்பத்தி செய்வோரும் அந்தந்த வேலையில் பழக்கப்பட்டவர்களை அந்தந்த வேலைக்கு அமர்த்திக் கொண்டா லன்றி அவர்கள் காரியம் பலிக்காது. இம்மாதிரிப் பழக்கம் புதி தாய் வருவதைக் காட்டிலும் வம்ச பாரம்பரையாயிருந்து, பிறந் தது முதல் பழக்கப்பட்டால் அது எவ்வளவு மேன்மையாயிருக் கும், ஒரு தச்சுவேலை செய்வோரின் பிள்ளை அவ்வேலையைப் புதி தாய்ப் பழகினவனைக் காட்டிலும் இலகுவாய்ச் செய்யமுடியும் இவன் அத்தொழிலின் பெரிய சாஸ்திரங்களைப் படிக்கின் அது அவனுக்கு சுவாதீனமாயிருக்கும். சாகுபடி செய்வோரின் வீட் டுப்பிள்ளைக்குப் பயிர் செயல் வெகுஇலகு. புதிதாய் நிலம் வைத் துக்கொண்டு விவசாய சாஸ்திரங்களைப் படித்தும், கான்பரன் சுகளுக்குப்போய் கேட்டும், பேசியும் வருபவர்களுக்கு விவசா யத்தில் பாம்பரைப்பழக்கப் பட்டவனுக்குள்ள அனுபவம் இல்லை என்பது அனுபவசித்தம். முன்காலத்தில் கட்டப்பட்ட கோபு ரங்கள், வெட்டப்பட்ட ஆறுகள்போல் இக்காலத்தில் எவ்வளவு

படித்த இஞ்சினியர்கள், யந்திரங்கள் வந்தபோதிலும் கட்ட முடியவில்லை. அவைகள் அப்படியே இருக்க புதிதாய் வந்தன வெல்லாம் அழிந்து கொண்டிருக்கின்றன. ஏன்? இம்மாதிரி யெல்லாம் யோஜிக்கின் இஜ்ஜாதிப் பிரிவினையும் கட்டுப்பாடும் லௌகீக காரியங்களுக்கு எவ்வளவோ அனுகூலமென்பது வெளிப்படும். இம்மாதிரிப்பிரிவினை மேற்குத் தேசங்களில் தாத்காலீகமாக இருக்கத் தானிருக்கிறது. அவை சமீபத்திலேயே நாகரீகமடைந்த தேசமாதலால் நம் தேசத்தில் எப்படி அவை மாற்றமுடியாமல் வேரூன்றிப் போயிருக்கின்றனவோ அப்படி அங்கு ஆகவில்லை. அவர்களில் தீர்க்க தர்சியாயிருந்தால் அதை விரும்புவார்கள். ஒருதொழிலை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் அரசாங்கத்தார் அதை வேறுயாரும் செய்யக் கூடாதென்று லைஸன்ஸ் கொடுக்கிறார்கள். இதேமாதிரிதான் ஒருவகுப்பார் காரியங்களை மற்றவகுப்பார் செய்யக்கூடாதென்று கண்டித்திருக்கிறார்கள். இப்பாகுபாடுகளில்லாவிட்டால் இந்தியா முன் காலத்திலாவது செல்வாக் கடைந்திருந்ததாய்ச் சொல்லப்படுவது இருந்திராது. பல வகைப்பட்ட பழக்கவழக்கங்களுள்ளவர்கள் ஒன்று சேருவதாலேயே தொத்து வியாதிகள் பரவுகின்றன வென்று மேல் நாட்டு நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். வியாதிகள் கண்ணுக்குத் தெரியாத அணுக்களால் பரவுகின்றன வென்றும், சிலவியாதிக் கிருமிகளை சில பழக்க வழக்க முள்ளவர்கள் சகிக்கக் கூடுமென்றும், அதுவே மற்றவருக்கு அபாயம் விளைவிக்குமென்றும், ஆகையால் வித்தியாஸப் பழக்க வழக்க முள்ளவர்கள் பரஸ்பரம் கலந்து கொள்வது அபாயகரமென்றும் அவர்கள் பிரசாரம் செய்கிறார்கள். இவைமுதல், இன்னும் மேல் நாட்டார்களால் அறியப்படாத எவ்வளவோ பெரிய பிரசினைகளை யெல்லாம் இத்தேசத்துப் பெரியோர்கள் முன்னமே ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்து அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

மேல் தேச நாகரீகத்தில் பழக்கப்பட்டுப் பிரமைகொண்ட நம்மில் சிலர் அத்தேசத்தவர்களால் கண்டு பிடித்துச் சொல்லப் படும்வரை அவைகளை மதிப்பதில்லை. உதாரணமாக பானம் முத

லியன அருந்துவதில் எச்சில் செய்யக்கூடாதென்ற வழக்கத்தை நவீன நாகரீகத்தில் பழகிய சிலர் அநாகரீகமாகக் கருதினூர்கள். இப்போதும் கருதுகிறூர்கள். இம்மாதிரி ஒருவர் உபயோகித்த பாத்திரத்தை மற்றவர் உபயோகிப்பதால் வியாதிகள் இலகுவாய் பரவுகின்றன வென்று ஒருபெரிய மேல் நாட்டு ஆராய்ச்சி நிபுணர் கண்டு பிடித்துச் சொல்லவே அமெரிக்கா தேசத்தில் காப்பி பானம் செய்ய ஹோட்டலுக்குப் போகும்போது சொந்தப் பாத்திரத்தைச் சட்டப்பையில் போட்டுக் கொண்டு போவதாய் பத்திரிக்கைகளில் சில வருஷமுன் படித்திருக்கிறேன். இருந்தாலும் எச்சில் வழக்கத்தை அவர்கள் விடமுடியவில்லை. பாத்திரம் மட்டில் தனியாக வைத்துக் கொண்டார்கள். நம் முன்னோர்கள் அவ்வழக்கமே நமக்கு அருவருக்கும்படி பழக்கியிருக்கிறூர்கள். எதுமேல்! நம்வழக்கம் அநாகரீகமென்று தள்ளி அவர்கள்போல் நாம் நடக்கலாமா?

ஆகவே நமது ரிஷிகள் ஏற்படுத்தியிருக்கும் ஆசாரணைகளுக்கெல்லாம் காரணமில்லாம லிருக்கமுடியாது அவர்கள்எழுதிவைத்திருப்பவைகளுக்குக் காரணங்கள் நமக்குப் புலப்படாவிடின் அது நமது அறிவின்மையே ஆகையால் மேற்கு தேசவாஸனையால் பிரமித்து, உலகெல்லாம் அகப்படாத "இக்கொல்லைக் காட்டுப் பச்சிலையை" நாம் அலக்ஷியம் செய்வது பெரிய மதீயீனம். மேல் தேச ஆசாரணைகள் அதற்குப் பொருத்தமாயிருக்கலாம். நம் தேச ஆசாரணைகள்தான் நமக்குப் பொருத்தம். ஒரு தேசத்துப் பழக்க வழக்கங்களை மற்றவர் அனுஸரிப்பதைப் பற்றிஸர் ஜான் வுட்ராப் என்ற ஆங்கில மேதாவியே தான் எழுதிய சமூகத்தின் வித்து (Seat ot Race) என்னும் புத்தகத்தில் பின்கண்டபடி எழுதியிருக்கிறூர்.

"பலசாலிகள் மாதிரி பலஹீனர்கள் நடக்க வேண்டு மென்பது கெட்டிக்காரத் தனமென்று சிலர் நினைக்கின்றனர். இதாள் மாதிரி நடப்பதில் நாம் நம்மையே இழந்துவிடுகிறோம் என்ற ஆபத்து அதில் எப்பொழுது மிருக்கிறது" ஜாதிப்பிரிவினை ராஜீய முன்னேற்றத்துக்கு இடைஞ்சலென்றூல், இதற்கு முன்னும் நம் தேசத்தில் இந்தமுன்னேற்றம் இருந்திருக்கக்கூடாது. (மகாத்மா)

காந்தியே "ராமராஜ்ஜியம்" என்று சிலாகிக்கிறார். வர்ணாசிரம தர்மங்கள் மேலோங்கியிருந்த காலந்தான் ராமராஜ்ஜியகாலம், ராமர் ஆண்டபோது

स्वकर्मसु प्रवर्तन्ते तुष्टाः स्वैरेव कर्मभिः ।

"தங்கள் கடமைகளாலேயே திருப்தி அடைந்தவர்களாய் தங்கள் கடமைகளையே செய்தார்கள்" என்று வால்மீகி எழுதுகிறார். இத்தேச சரித்திரத்தை நன்குணர்ந்தால் "வர்ணாசிரமங்கள்" கலைக்கப்பட ஆரம்பித்ததிலிருந்தே எல்லாக்குறைகளும் இத்தேசத்துக்கு வந்திருக்கின்றன வென்பது விளங்கும். இவ்வர்ணாசிரம தர்மங்கள் பிடிக்காத ஒரு மேதாவி, தான் எழுதிய இந்தியாதேச சரித்திரத்தில் "சாஸ்திரமும் கல்வியும்" (Sceince and learning) என்ற தலைப்பின்கீழ் அவைகளைப்பற்றி "இவ்வுலகத்தின் முதல் (Logic) தர்க்கவித்தை" யென்றும் "இவ்வுலகம் ஒன்றுமறியாத பெரிய இலக்கணத்தை இயற்றிய பாணிநீ" என்றும் இம்மாதிரி அபாரமாக ஸ்தோத்திரம் செய்கிறார். இன்னும் அவர் எழுதுவதாவது:—

"கீழ்தேச பாஷைகளிலுள்ள பதினாயிரக்கணக்கான வார்த்தைகளை சிலநூறு தாதுக்களில் அடக்கிவிடலா மென்று சென்ற நூற்றாண்டில் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. இக்கண்டு பிடித்தல் சம்ஸ்கிருதபாஷை சம்பந்தப்பட்ட மட்டில் பாணினியின் காலத்துக்கு முந்தியே இந்தியாவில் கண்டு பிடிக்கப் பட்டு விட்டது." இவர்களை தீர்க்கதர்சிகளாய் ஒப்புக்கொள்ளு மிவருக்கு வர்ணாசிரமங்களை ஏற்படுத்தியவரும் தீர்க்கதர்சிகளாகத் தானிருக்கவேண்டும் என்று மனதில் படவில்லை.

நிற்க, இந்துக்களின் வகுப்பு வேறுபாடுகள் ராஜீய முன்னேற்றத்துக்கு இடைஞ்சலானால், மகமதியர்கள் கிருஸ்துவர்கள் என்ற பலமதப் பிரிவினைகள் இடைஞ்சலில்லையா? ஹிந்துக்கள் மட்டுந்தானா இந்தியாவிலிருக்கப் போகிறார்கள்! ராஜீய முன்னேற்றத்துக்கு இவ்வகுப்பு பேதங்கள் இடைஞ்சலானால், பணக்காரன் —ஏழை, எஜமான்—வேலைக்காரன், படித்தவன்—படிக்காதவன், புத்திசாலி—முட்டாள் என்பதைப்போலொத்த வித்தி

யாசங்கள் இன்னும் அதிக இடைஞ்சலாக வேண்டும். இவைகளை யெல்லாம் யார் மாற்றப் போகிறார்கள்? சாஸ்திரங்கள் ஒருதலைப் பட்சமாய் எழுதப்பட்டன வென்பவர்கள் மேல் வர்ணத்தார் தங் களைப்பற்றி உயர்த்தி எழுதிக்கொண்டு விட்டார்கள்என்றே சொல் லுகிறார்கள். அதெப்படிப் பொருந்தும்? அவர்கள் பட்சபாத மாய் எழுதிககொண்டு விட்டால் அவர்களைக் கண்டித்து அக்கா லத்தில் என் ஒருவரும் எழுதவில்லை? எழுதிய மற்றவகையாரும் ஏன் அப்படியே அனுசரித்து எழுதவேண்டும்? உண்மையாய்ப் பார்க்கப் புகின் மேல் வர்ணத்தாருக்கு மிகுந்த கஷ்டமாய் இகத் தில் சுகமே இல்லாத விதமாய் மற்றவர்களுக்காகச் சிரமப்படும் படி கடுமையாய் விதித்திருக்கிறார்கள். கீழே போகப்போக விதி களைத் தளர்த்தியிருக்கிறார்கள். இவைகளை ஆராய்ந்து பார்த் தால் பட்சபாத மென்னும் வாசனையே அவர்களுக்கில்லை யென் றும், தந்நலமறுப்பு, பரோபகாரம், ஜீவகாருண்யம் இவைகளே அவைகளில் பொதிந்துகிடக்கின்றன வென்பதும்நன்குவிளங்கும்.

அடுத்தகட்சியை இப்பால் கவனிப்போம்.—ஒரு மனிதன் குணங்களினாலும் கர்மாக்களினாலும், ஜாதியை நிர்ணயிக்கவேண் டுமென்று சொல்லுபவர்கள் பகவத்கீதையில்,

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ॥

என்ற சுலோகத்தையும் இன்னும் சில பாரதக்கதைகளையும், விசு வாமித்திரர் பிராமணரானதையும், இன்னும் அர்த்தவாதமாய் ஆங்காங்கு சொல்லப்பட்டவைகளையும் உதாகரிக்கின்றார்கள். அதே பகவத்கீதையில் "जायते वर्णसङ्करः"

उत्साद्यन्ते जातिधर्माः कुलधर्माश्च शाश्वताः ।
श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ॥
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ।
स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः ॥
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ॥

என்று பல விடங்களில் சொல்லப்படுகிறது. இவைகளால் ஜாதி தர்மங்கள் ஸ்திரமானவை யென்றும், அவரவர்களுக்கேற்பட்ட தர்மங்களினின்றும் வேறு தர்மங்களே அனுஷ்டிக்கக் கூடாதென் றும் ஏற்படுகிறது. அவர்களிஷ்டப்படி அர்த்தமானல் ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனி தர்மமென்பது எப்படிப் பொருந்தும்? குணகர்மாக்களால் பிராம்மண்யம் என்றால், விசுவாமித்திரர், "க்ஷத்திரியனைக் காட்டிலும் பிராமணன் தான் மேல்" என்று தீர் மானித்து ராஜ்ஜியத்தை எப்பொழுது விட்டாரோ அப்பொழுதே அவர் பிராம்மணராயிருக்க வேண்டும். அப்படியாகவில்லை அதற் காக, பிறகு அவர் அபாரமான காரியங்களே செய்து மிகுந்த கஷ் டப்பட்டிருக்கிறார். ஆகவே இம்மாதிரி புதிதாய் அர்த்தம் செய் யப்படும் இதிஹாஸங்கள் எல்லாம் அந்தந்த ஜாதிக்கேற்பட்ட கர்மாக்களினின்றும் பிறழக்கூடாதென்று கண்டிப்பதற்காக அ வைகளே மேல்படுத்திச் சொல்ல ஏற்பட்டனவேயன்றி வேறல்ல. இதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம்:—

பசுவுக்கு ஸாதுவாயிருக்கும தன்மை சுபாவம், புலிக்குப் பாய்வது சுபாவம், பயிர்களேயழிக்கும் பசுக்கள் வேலிகளேத்தா ண்டிப்பாய்ந்து, பயிர்களே நாசம் செய்து, கிட்டவருபவர்களேக் கொம்புகளினல் ஹிம்ஸிக்கின்றன. அதேமாதிரி புலியும் சர்க்கஸ் காரர்களால் பழக்கப்பட்டு ஸாதுவாயிருப்பதை நேரில் காண்கி றோம் அதற்காகப்பசுவைப் புலியாயும், புலியைப் பசுவாகவும் மாற்றிவிட முடியுமா? ஸாதுப் புலியென்றும், துஷ்டப்பசுவென் றும், தான் கூறலாம். இம்மாதிரியேதான் ஸ்வதர்மததை அனு ஷ்டிக்காத வர்ணத்தவரைச் சொல்ல வேண்டுமேயன்றி வர்ணமே மாறிவிடுமென்று சொல்லுவது தகாது. இந்த அர்த்தம் பெஸண்டு அம்மையாரைத் தலைமையாகக் கொண்ட "பிரும்மஞான சங்கத் தாரால்" கண்டு பிடிக்கப்பட்டது. இதற்கும் மேற்கு தேசத்தா ரால் கண்டு பிடிக்கப்பட்ட கௌரவம் உண்டு. ஏனெனில் இந்த சூட்சுமார்த்தம் முன்னோர்களுக்கெல்லாம் விளங்கவில்லை! இந்த அர்த்தம் தெரிந்திருந்தால் ஜனகர் க்ஷத்திரியராயிருந் திருக்கமாட் டார். பரசுராமரை "க்ஷத்திரிய தர்மத்தைக் கொண்ட பிராம ணர்" என்று "பவபூதி" எழுதியிருக்கமாட்டார்! இவ்வாதத்தின்

உசிதத்தைப் பற்றி இதற்குமேல் எழுதவேண்டுவது அவசிய மாய்த் தோற்றவில்லை. *அடுத்த வியாஸத்தில் தீண்டாமையைப் பற்றியும் அவ்விஷயமாய் (மகாத்மா) காந்தி சொல்லும் சில அபிப் பிராயங்களைப் பற்றியும் விசாரிப்போம்.

வா. பஞ்சாபகேசய்யர்.

வைக்கமும் ஈழுவர்களும்.

இவ்விஷயத்தைப்பற்றி முன்னமேயே நம் பத்திரிகையில் தெருவித்துள்ளேன். இந்த விஷயத்தையே மீண்டும் துடங்கு கின்றேன். இங்கு தொன்று தொட்டு ஈழுவர்களென வழங்கப் பெறும் தாழ்ந்த ஜாதியார்கள் இங்கு கோயில் பக்கத்திலுள்ள வீதிவழியில் செல்வதில்லை, அப்படி அவர்கள் செல்லாதிருப்பது சொல்படியுள்ள நல்லவென்று வாதித்துச் சிறிது காலமாய் நாங் களும் அங்கு செல்லவேண்டுமென்று தூண்டப்பெற்ற அவர்கள் மற்ற ஜாதியாருடன் கலந்து பிடிவாதம் என்ற சத்தியாக் கிரகம் செய்துவருகிறார்கள். இவ்விஷயத்தில் ஜயம்பெறுவதற்காக அவர் கள் கூட்டமாய் அங்கிருந்து திருவனந்தபுரம்வரை நடந்துபோய் மகாராணியாரவர்களின் உத்திரவும்பெற்று வந்துவிடுவோமென்று புறப்பட்டுப்போனதும் வழிநெடுக அன்னவர்கட்கு மிக உபசா ரம் நடைபெற்றதாய் சுதேசமித்திரன் ஆரவாரித்ததும் அங்கு சென்று மகாராணியாரவர்களைப் பேட்டிகண்டு மலைபோல் குவித் து மனதில் கட்டிவைத்திருந்த தங்களது எண்ணமென்னும் மூட் டையை அவிழ்த்து உதறியதும், அதற்கு மகாராணியாரவர்கள் ராஜாங்கத்திற்குப் பொருத்தமாயும் சுருக்கமாயும் சட்டஸபையில் இவ்விஷயம் வரப்போகிறது, அப்போது ராஜாங்கம் கவனிக்கு மென்று பதில் அளித்ததும் அப்படியே சட்டசபையில் அது தோன்றி அங்கு அடிபட்டுப்போனதும் பத்திரிகை படித்துவரும் அபிமானிகட்கு வெளிச்சம்தான். இதை மீண்டும் விஸ்தரித்து எழுதுவதில் பயனில்லை என்று மேற்செல்வாம். வைக்கத்துக்

*குறிப்பு:— இந்த ஜாதிவிஷயமாய் பிரமாணங்களுடன் நன்கறிய விரும்புவோர் எம்மால்வெளியிடப்பட்ட "ஜாதிநிர்ணயம்" என்கிறபுஸ் தகத்தால் தெரிந்து கொள்ளலாம். ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

கோவில் பக்கத்து வீதியில் ஈழுவர்கள் செல்வதற்கில்லையென்று சட்டசபையில் தீர்மானமானதிலிருந்து அங்குள்ள சத்தியாக்ரகம் சற்றே தளர்வடையவேண்டிய ஸ்திதியிலாயிற்று. இதைக் கேட்டு தேசத்தை உயரத் தூக்கிவிட முன்வந்திருக்கும் தீரர்கள் பத்திரிகைகளிலும் காந்தியவர்களுக்கும் தெரிவித்தனர். அதைக் கேட்டு காந்தியவர்கள் வைக்கம் ஸத்தியாக்கிரகிகளுக்கு உத்ஸாகம் ஊட்ட நேரில் தான் வருவதாய்த் தெரிவித்து அவ்விதமே அங்கு சென்றூர்கள், அந்த ஸ்தலங்களைப் பார்வையிட்டுப் பிறகு முறையே திருவனந்தபுரத்திற்கும் போனூர்கள். வல்கறையில் மகாராணியாரவர்களையும் பேட்டிகண்டார்கள். ஆனல் தான் எந்த எண்ணத்தோடு வந்தனரோ அது நடைபெறவில்லையென்று காந்தியவர்கள் சொல்கிறூர்கள். தான் நேரில் வந்தால் அதற்காக ஆஸ்திக வைதிகர்கள் சாஸ்திரத்தைக் கீழே எறிந்துவிடுவார்களென்று நினைத்தனரோ என்னவோ தெரியவில்லை. ஆனல் இது சாஸ்திரத்திற்கும் அனுஷ்டித்தமான ஆசாரத்திற்கும் ஒவ்வாதென்பதே வைதிகர்களது ஸித்தாந்தம். சாஸ்திரத்தில் இவ்விதம் இல்லையென்று சாஸ்திரங்களைப் புரட்டிப்பார்த்துப் பல பண்டிதர்கள் தன்னிடம் சொல்கிறூர்களென்று காந்தியவர்கள் சொல்கிறூர்கள். சாஸ்திரத்தில் அவ்விதமிருக்கிறதென்று அநேக பண்டிதர்கள் கூறும் வார்த்தை வீண்தானு? அப்படி வீணென்று எவ்விதம் ஸித்தாந்தம் செய்துகொண்டனரோ தெரியவில்லை. ஆனல் காந்தியவர்கள் தான் ஸனுதன ஹிந்துவென்றும், வேதசாஸ்திரம் பிரமாணம்தானென்றும், ஆயினும் நெருங்கக்கூடாத ஜாதி உண்டென்று வேதசாஸ்திரம் சொன்னல் அதைமட்டில் தனக்கு ஏற்றுக்கொள்ள சம்மதமில்லையென்றும், ஏனெனில், லோகத்திற்கும் யுக்திக்கும் ஏற்காததால்தானென்றும் கூறுகின்றனர். இது அவ்வளவு நியாயமில்லை பாருங்கள் இவர்களது மனதுக்குப் பிடிக்கவில்லையென்பதற்காக எல்லோரும் ஒப்புக்கொள்வதா? இவர்களது யுக்திக்கு ஒத்துவரவில்லையென்றுலாவது அல்லது இவர்களைப் பின் தொடர்பவர்களது யுக்திக்கு ஏற்கவில்லை யென்றுலாவது வேதம் சாஸ்திரம் இவைகள் தள்ளப்பட்டுவிடுமா. வேதசாஸ்திரங்களில் நமது யுக்தியைக்கொண்டு தர்க்கம் செய்யக்கூடாதென்பதே நமது சாஸ்திரங்களின் தத்வமென்பதை

तर्काप्रतिष्ठानादप्यन्यथानुमेयमितिचेदेवमप्यनिर्मोक्षप्रसङ्गः ।

என்ற ஸூத்ரத்தை வியாஸரும் அப்படியே பாஷ்யகாரரும் வற்புறுத்திக் கூறுகின்றனர். இம்மட்டா,

आर्षं धर्मोपदेशं च वेदशास्त्राविरोधिना ।
यस्तर्केणानुसन्धत्ते स धर्मं वेद नापरः ॥

ரிஷிகளால் சொல்லப்பட்ட தர்மங்களை வேதசாஸ்திரங்களுக்கு விரோதமில்லாத தர்க்கத்தால் எவன் சிந்திக்கின்றானோ அவன் தான் தர்மத்தை அறிவான். மற்றவன் அறியமாட்டான் என்று மனு முதலியவர்களும் கூறுகின்றனர். இதுமட்டுமல்ல. இப்போது நம் இந்தியாவில் தோன்றும் எம் மதங்களுள்ளும் தங்கள் வேதமென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பாகத்தில் தன் யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்திருக்கவில்லையென்று அவ் வபிமானிகள் சொல்லக் காணோம். அப்படியிருக்க நாம் சொல்லிக்கொண்டும் ஸனாதன ஹிந்துவென்றும் சொல்லிக்கொள்வது அழகாகுமோவென்று எண்ணுகிறேன். ஆனால் காந்தியவர்கள் வைக்கத்திற்கென்று புறப்பட்டது முதல் வழிதோறும் அவர்களைப் பேட்டி கண்டதும் ஜனங்கள் ஆனந்தம்கொண்டதும் அளவிடத்தக்கதல்லவென்றும், வைக்கத்திலும் ஏராளமான கூட்டத்தில் அவர்களுக்கு உபசாரப் பத்திரம் கொடுத்தார்களென்றும் மித்திரன் வாயிலாய் யானறிந்தது போல் மற்றவர்களும் அறிந்திருப்பார்கள். அதில் எனக்கு சந்தோஷம்தான். லோகத்திற்காகவென்று தன் உயிர், பொருள், ஆவி இம் மூன்றையும் அர்ப்பணம் செய்தவர்கள் இவர்கள்தான். ஆனாலும் லோகம் முன்னேறுவதற்கு வர்ணாசிரம தர்மத்தைத் தொலைத்துவிடவேண்டும் என்றும், அப்போதுதான் அது கிட்டும்என்றும் நினைப்பதுமட்டிலும் யுக்தமே இல்லை. காந்தியவர்கள் வர்ணாசிரம தர்மத்தை ஒப்புக்கொண்டு நான்கு வர்ணம் தான் உண்டென்றும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆயினும் பிராமணன் சூத்திரன் என்று தனிப்பட்டவர்கள் உண்டென்பதை ஏற்றுக்கொண்டதாய் ஆகவில்லையா? அவர்களுக்கு தர்மம் ஆசாரம் முதலியவை வேறுபட்டிருந்தாலொழியப் பிரிவு

ஏற்பட வேறுவழி இல்லையே. பஞ்சமர்கள் என்று விலக்கத்தக்க ஜாதி இல்லையென்றால் அவர்கள் எந்த வகுப்பைச் சார்ந்தவர்கள்? இவ்விதம் அடிமையாய் விலக்கியடிக்கப்பட்டது எக்காலத்தில்? அப்படிப் பிரித்து வெகு தூரத்தில் ஒதுங்கும்படி செய்தது த்வேஷத்தாலா? அல்லது வேறு எதனால்? அவர்கள் அப்படி விலகியிருந்ததனால் இதுகாறும் அனுபவித்த துன்பமென்ன? இனி எந்த சுகத்தில் நம்மோடு பங்குக்குச் சேர்த்துக் கொள்ளப் போகிறோம்?

தீண்டாதவர்களை நாம் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மட்டிலும் சொல்கிறேனே தவிர அவர்களோடு ஸமபந்தி போஜனம் செய்யவேண்டுமென்றாவது ஸம்பந்தம் செய்யவேண்டுமென்றாவது சொல்லவில்லையென்று காந்தியவர்கள் சொல்கிறார்கள். சேர்த்துக் கொள்ள மட்டிலும் எந்த சாஸ்திரம் ஆதாரமாய்க்கிடைத்தது. ஸமபந்தம் ஸம்பந்திபோஜனம் மட்டிலும் பாபமென்று சொல்லிவிட்டது. அவைபாவம் தானென்றால் தான் சண்டாள கன்னிகையை வளர்ப்பதும் அதனுடன் புசிப்பதும் பாபமல்லவா? உண்மையில் பாபமில்லையென்று நினைத்தால் உலகத்தினருக்கும் அப்படி ஏன் உபதேசிக்கக்கூடாது. இதையெல்லாம் காந்தியவர்களை நான் கேழ்விகேட்பதாய்க் கொண்டு விடக்கூடாது. உண்மையை அறிய விரும்பியே இவ்விதம் வரைகின்றேன். சாஸ்திரத்தை நம்பவில்லை என்றால் அதற்குமேல் கேழ்வி இல்லை. நம்பினேனென்றால் சாஸ்திரம் சொல்வது சிலதான் உண்மைகள், பல தள்ளுபடியுள்ளனவென்றால் அது பொருந்தாது நமது சினேகிதன் தான், இவன் ஆனால் சிலசமயம் இவன் வார்த்தையை நம்பலாம், சில விடத்தில் நம்பினால் கெட்டுவிடுவோமென்றால் அவனை சினேகிதனென்று சொல்வோமா? காந்தியவர்கள் தைவம் உண்டென்று எண்ணம் உள்ளவர்கள்தான். இவ்விதம் அவர்களே பன்முறை கூறியிருக்கின்றனர். அவ்விதமாயின் தைவம் அறிவுள்ளதா? அவவறிவு நமது அறிவுக்கும் மேலானதா? அல்லது அறிவில்லாமல் பௌத்தன் சொல்வதுபோல் பிரதானமா பிரதானவாதியென்றால் அவ்வாதத்தை வேறாக்கவைதற்காகவே பகவத்பாதாவதாரம் ஏற்பட்டதென்றும் அதற்காகவே ஸூத்திரபாஷ்

யம் செய்தாரென்றும் வெள்ளிடைமலைபோல் விளக்கம்தான். இனி அறிவுள்ளதென்றால் அவ்விதம் எதனால் நாம் நிச்சயமாய்த் தெரிந்து கொண்டோம். அறிவுள்ள பகவான் வாய்திறந்து சொன்ன சொற்கள் இப்போது மிருக்கின்றனவா? அப்படியிருப்பின் அதில் பொய்யும் பொருந்தாததும் கலந்திருக்குமோ. இவ்விதமெல்லாம் பலவாறு கேள்விபிறக்கிறதால் ஆஸ்திகர்களாகிய நாம் நமது புத்திபோலெல்லாம் போகக்கூடாது. இப்படியெல்லாம்கூறின் நம்மை ஒரு மதஸ்தனும் சேர்த்துக்கொள்ள மாட்டான். இவ்விதமெல்லாமிருக்க வைக்கத்திற்குக் காந்தி அவர்கள்போனதில் வைதிகர்கள் பிடிவாதமாய் முறட்டுத்தனம் செய்து விட்டார்களென்றும் திருவனந்தபுரம் கவர்ண்மெண்டில் சட்டஸபையில் ஈழுவர்கள் செல்லக்கூடாதென்று கவர்ண்மெண்ட்தரப்பு மெம்பர்கள் ஓட்கொடுத்தது நியாபமில்லையென்றும் வெகுஜனம் ஸம்மதிக்கப்படவில்லையென்றும் காந்தியவர்களை அங்கு எல்லாவிடத்திலும் சந்தோஷமாய் வரவேற்றுஉபசரித்தே வெகு ஜனங்களின் ஸம்மதம் இருக்கிறதென்று தெரியவில்லையா வென்றும் மித்திரன் பத்திரிகை கர்ச்சிக்கிறது. காந்தியவர்களை உபசரித்ததில் லோகத்திற்கு ஊழியஞ்செய்வதிற் சிறந்தவரென்பதற்காக மட்டிலும் உபசரிக்கிறோம் தீண்டாமை விஷயத்தைப்பற்றி அபிப்பிராயம் பலவேறாய் இருக்கலாம் என்று சொல்லியே வைக்கத்தில் உபசாரப்பத்திரிகை கொடுபட்டிருக்கிறது. எல்லோரும் எங்கேயும் உபசரிக்கிறார்களே நாமும் உபசரிப்போபோமென்று செய்தவர்கள் பலர்.

(தொடரும்)

எம். என். சுப்ரம்மண்யசாஸ்திரிகள்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.